VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To | Printed Matter

If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:3 | இதழ்:10 | ஜூலை:2019 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/–
Volume:3 | Issue:10 | July:2019 | Rs.10/- | Annual Subs: Rs.100/-



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

*81/1, மன்னப்பன் தெரு,*
*கோட்டூர், சென்னை – 600 085.*
**போன்: 044 – 2447 4744**

22.06.2019 அன்று கரூர் மாவட்டம் ஐயர் மலையில் அமைந்துள்ள ஸ்ரீ ஸ்ரீ வித்யா மஹா சௌபாக்ய பராம்பிகா பீடத்தில் ஸ்ரீ மஹா மேரு மண்டலியினரால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம லக்ஷார்ச்சனை நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.







இமைப் பொழுதில்
**கண் முன்**
**உங்கள் கிரெடிட் கார்டு**

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

## இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**



**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 10

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**புத்தகக் குழு :**
**ஸ்ரீ டி. சூரியநாராயணன்**
**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**
**ஸ்ரீமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**
**ஸ்ரீ ஸ்ரீகாந்தன்,**
**ஸ்ரீ சௌந்தரராஜன்,**
**ஸ்ரீ விஸ்வநாதன்**
**ஸ்ரீ ஸ்ரீநிவாசன்,**
**வேளச்சேரி ஸ்ரீ நடராஜன்,**
**ஸ்ரீ ஸ்வாமிநாதன்,**
**நங்கநல்லூர் ஸ்ரீ விஸ்வநாதன்,**
**ஸ்ரீ மணிசங்கர்**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020**

## புத்தகத்தின் உள்ளே

ஒரு நிமிடம் உங்களோடு 4
ஜுலை மாத விசேஷங்கள் 5
அட்டைப்பட விளக்கம் 6
ஸ்வாமிகளின் ஆசிகள் 10
சுபாஷிதம் 11
பிரதக்ஷிணம் 12
பெற்றோர்களே கவனியுங்கள் 14
சிருங்கேரி ஜகத்குரு மகா ஸ்வாமிகள் அருளியவை 16
மஹாபெரியவா அற்புத விளக்கங்கள் 18
ஸ்ரீமத் பகவத்கீதை 23
பூ சூடல் 26
தர்மத்தின் குரல் 28
ஸந்த்யாவந்தன பயிலரங்கம் 30
விஷ்ணு ஸஹஸ்ரநாமமும் சடையாண்டியும் 32

**சந்தா விவரம்**
வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500
சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும்.
சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்டர்ஸ்**
1, லட்சுமிநகர்,
100 அடி சாலை, வேளச்சேரி,
சென்னை - 42. செல்: 8939000064

## ஒரு நிமிடம் உங்களோடு!

இந்த பிரபஞ்சத்தில் நடக்கும் ஒவ்வொரு செயலும் கூட்டு முயற்சியில்தான் நடைபெறுகிறது. ஆனால் மனிதன் “எல்லாம் என்னால்தான் நடந்தது” என்று கூறுகிறான். எது செய்தாலும் அதில் எல்லாருடைய பங்கும் உள்ளது என்ற எண்ணம் உண்டாக வேண்டும். பகவான் தந்த வாழ்க்கை என்ற பரிசை, பாக்யத்தை நல்ல விதத்தில் மற்றவர்களுடைய மனம் புண்படாமல் உபயோகிக்க வேண்டும். எல்லோருக்கும் சகோதர மனோபாவம் ஏற்பட வேண்டும். உலகில் யாரும் உயர்ந்தவரும் இல்லை தாழ்ந்தவரும் இல்லை. அவரவர்களுக்கு உள்ள வேலையை அவரவர் செய்தால் போதும்.

ஒரு ஊரில் ஒரு சலவைக்காரன் இருந்தான். அவன் துணிகளைச் சுமக்க ஒரு கழுதையையும், வீட்டு காவலுக்கு ஒரு நாயையும் வளர்த்து வந்தான். ஒரு நாள் கழுதைக்கும் நாய்க்கும் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது. இரண்டும் எஜமானனுக்கு நான்தான் முக்கியமானவன் என்று கழுதையும், இல்லை நான் தான் உண்மையான விசுவாசி என்றும் நாயும் சண்டைபோட்டுக்கொண்டன. நாய் கழுதையிடம் “நம்மில் யார் எஜமானனுக்கு உண்மையான ஊழியன் என்பதை நிருபிக்க இன்று ஒரு நாள் இரவு நீ வீட்டைப் பார்த்துக் கொள். நான் நாளை துணிகளை சுமக்கிறேன்'' என்றது இதற்கு கழுதையும் ஒப்புக்கொண்டது.

அன்று இரவு வீட்டிற்கு ஒரு திருடன் வந்தான். இதைக் கண்ட கழுதை தன் எஜமானனை எழுப்புவதாக நினைத்து தன்னுடைய குரலில் கத்தியது. இதைக் கேட்ட சலவைக்காரன், கழுதை தன் தூக்கத்தைக் கெடுத்துவிட்டது என்று எழுந்துவந்து கழுதையை நையப் புடைத்தான். பொழுதுவிடிந்து பார்த்தால் வீட்டில் எல்லாம் திருடு போயிருந்தது. இரவில் திருடன் வந்ததை நாய் உஷார்படுத்தவில்லை என்ற கோபத்தில் நாயையும் நையப் புடைத்துவிட்டான்.

இரண்டும் அதனதன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால் வீணாக அடி வாங்கியிருக்க வேண்டாம். இது போல்தான் சில மனிதர்களும்.

**- டி. சூரியநாராயணன்**



## ஜுலை மாத விசேஷங்கள்

### (ஜுலை 1/2019 முதல் ஜுலை 31/2019 வரை)

| தேதி | கிழமை | | விசேஷம் |
|---|---|---|---|
| 1 | திங்கள் | ஆனி | மாத சிவராத்திரி |
| 2 | செவ்வாய் | | அமாவாசை |
| 6 | சனி | | சதுர்த்தி விரதம் |
| 8 | திங்கள் | | சஷ்டி விரதம் |
| 10 | புதன் | | மஹா சுதர்சன ஜெயந்தி |
| 12 | வெள்ளி | | ஏகாதசி |
| 13 | சனி | | அனுஷம் |
| 14 | ஞாயிறு | | பிரதோஷம் |
| 16 | செவ்வாய் | | குருபூர்ணிமா சாதுர்மாஸ்ய விரத ஆரம்பம் சபரிமலை நடைதிறப்பு / பௌர்ணமி / சந்திரகிரஹணம் |
| 17 | புதன் | ஆடி | மாதப்பிறப்பு |
| 19 | வெள்ளி | | பிரதோஷம் |
| 21 | ஞாயிறு | | சபரிமலை நடை அடைப்பு |
| 23 | செவ்வாய் | | ஷஷ்டி |
| 28 | ஞாயிறு | | ஏகாதசி |
| 29 | திங்கள் | | பிரதோஷம் |
| 31 | புதன் | | அமாவாசை |

சந்த்ர கிரஹனம் தொடர்பான ஸந்தேகங்களுக்கு ஆத்து வாத்யாரை கேட்டு தெரிந்து கொள்ளவும்.

## பிழைக்கு வருந்துகிறோம்

ஜுன் மாத இதழில் அட்டைப்படம் கூர்ம அவதாரத்திற்கு பதிலாக வராக அவதாரம் பிரசுரம் செய்யப்பட்டு, பிழை தெரிந்ததும் உடனடியாக மாற்றப்பட்டு மீதமுள்ள புத்தகங்களை அனுப்பினோம். வாசகர்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் எங்களுக்கு நல்ல ஊக்கமுள்ள கருத்துக்களை பகிர்ந்து கொண்டமைக்கு மிக்க நன்றி.

- என்றும் அன்புடன்
ஆசிரியர்

**சந்தா புதுப்பிக்க :**

ஸ்ரீ ரங்கராஜன் - 99628 78878 / வெங்கட்ராமன் - 9443495950

## அட்டைப்பட விளக்கம்

# ‘‘மாணிக்கவாசகர்’’ (மணிவாசகப்பெருமான்)

இவருடைய காலம் பற்றி கருத்து வேறுபாடுகள் பல இருக்கின்றன. இவர் மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் உள்ள **‘‘திருவாதவூர்’’** என்ற திருத்தலத்தில் **‘‘அமாத்ய பிராமணர்’’** வகுப்பில் பிறந்தவர். 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் பிறந்த ஊரின் பெயராலேயே **‘‘வாதவூரார்’’** என்று அழைக்கப்பட்டார். இவர் 16 வயதுக்குள் வேதங்களையும், பல கலைகளையும் பயின்று பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்று திகழ்ந்தார். வேதங்களைப் படித்துவிட்டு ஒருவரிடம் வேலை பார்ப்பவர்களை **‘‘அமாத்யன்’’** என்பார்கள். ஸம்ஸ்க்ருதத்தில் ‘‘அமாத்யன்’’ என்றால் மந்திரி. அமாத்யன் தான் தமிழில் **‘‘அமைச்சன்’’** ஆயிற்று என்று மஹா பெரியவா **‘‘தெய்வத்தின் குரல்’’** ஆறாம் பகுதியில் கூறியுள்ளார். வாதவூராரின் அறிவாற்றலைக் கேள்விப்பட்ட மன்னன் **‘‘அரிமர்த்தன பாண்டியன்’’** அவரை வரவழைத்து அவையின் முதல் அமைச்சர் பதவியைக் கொடுத்து **‘‘தென்னவன் பிரமராயன்’’** என்ற பட்டத்தையும் அளித்தான். உயர் பதவியும், செல்வமும் வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை உணர்ந்த **வாதவூரர்** சைவ சித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாட்டை பின்பற்றினார். ஒரு சமயம் அரசன் குதிரைகள் வாங்கி வரும்படி இவரை பணித்து தேவையான பொன்னையும் கொடுத்து படைவீரர்களுடன் வாதவூராரை வழி அனுப்பினார். சிவபெருமானுக்கு இது தெரியாதா? அவர் தன் திருவிளையாடலை நிகழ்த்த ஆரம்பித்துவிட்டார். வாதவூரார் தான் கொண்டு சென்ற பொன்னை குதிரைகள் வாங்காமல் திருப்பெருந்துரை (ஆவுடையார் கோயில்) திருப்பணிக்கு செலவிட்டுவிட்டார். சிவபெருமான் குருவைப்போல் வேடம் பூண்டு ‘‘குருந்த’’ மரத்தின் அடியில் வாதவூராருக்கு தீட்க்ஷை வழங்கி அவருக்கு **‘‘மாணிக்க வாசகர்’’** என்னும் திருநாமம் சூட்டினார்.



நரி பரியானது, வைகையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இறைவன் பிரம்படிபட்டது. எல்லாம்மாணிக்கவாசகர் வாழ்வியல் அற்புதங்களாகும். தன் தவறுகளை எல்லாம் உணர்ந்த அரிமர்த்தன பாண்டியன் மாணிக்கவாசகரை மீண்டும் மந்திரி பதவியை ஏற்கும்படி கேட்டுக்கொண்டான். ஆனால் மாணிக்கவாசகர் அதை ஏற்காமல் அரசனை ஆசீர்வதித்துவிட்டு தில்லையம்பலமாகிய சிதம்பரத்திற்குச் சென்று தில்லையம்பதியானை நினைத்து **‘‘திருவாசகம்’’** பாட ஆரம்பித்தார். அங்கு வேதியர்போல் அமர்ந்திருந்த சிவபெருமான் மாணிக்கவாசகர் பாடப்பாட அதை ஓலைச்சுவடியில் எழுதத்தொடங்கி எழுதி முடித்ததும் ஓலைச்சுவடியின் அடியில் மாணிக்கவாசகன் சொன்ன திருவாசகத்தை எழுதியது அழகிய திருச்சிற்றம்பலமுடையான் என்று கையொப்பமிட்டு சிதம்பரம் கனகசபையில் வைத்துவிட்டு மறைந்துவிட்டார். அப்போதுதான் மாணிக்கவாசகருக்கு தான் கூறிய திருவாசகத்தை எழுதியது சிவபெருமான் என்பது தெரியவந்தது.

மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராவார். மற்றவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, பன்னிரு திருமுறைகளில் திருவாசகம் எட்டாவது திருமுறையாகும். மந்திரங்களிலே எட்டாவது மந்திரம் ‘‘சிகாமந்திரம்’’. நம் தலைக்குமேல் இருப்பது சிகை. சிகைக்கு மேல் ஏதும் கிடையாது. திருவாசகத்திற்கு மேல் வேற நூல் கிடையாது என்பதைக் காட்டத்தான் எட்டாவது திருமுறையாக நமக்கு அளிக்கப்பட்டது’’. ‘‘திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்’’ என்பது முதுமொழி. பக்தி சுவையும், மனதை உருக்கும் தன்மையும் கொண்டது. ‘‘திருவாசகம்’’ மாணிக்கவாசகர் ‘‘அமாத்ய பிராமணர்’’. வேதங்களை நன்கு கற்றவர். ஆகையால் திருவாசகத்தை எழுத ஆரம்பிக்கும் போதே வேத மந்திரமான ‘‘நம: சிவாய’’ பஞ்சாக்ஷர மந்திரத்தை வைத்துக்

கொண்டு ''நமசிவாய வாழ்க'' என்று ஆரம்பிக்கிறார். திருவாசகத்தைப் பாடிமுடித்தவுடன் சிவபெருமான் மாணிக்கவாசகரிடம் "பாவை பாடிய வாயால் கோவைப் பாடுக" என்று சொன்னார். மாணிக்கவாசகரும் "திருக்கோவையாரையும், திருவெம்பாவையையும் பாடினார். திருவாசகத்தில் பக்தியையும் "திருக்கோவையில் வேதாந்தந்தையும் சொல்கிறார்.

ராமலிங்க அடிகளாருக்கு திருவாசகத்தின் மீது மிகுந்த காதல். அவர் திருவாசகத்தின் பெருமையைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

**"வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால் நற் கருப்பஞ் சாற்றினிலே**
**தேன் கலந்து, பால் கலந்து, செங்கழுங்கனித் தீஞ் சுவை கலந்தென்**
**ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"**

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரான ஜி.யு.போப் என்ற ஆங்கிலேயர் மாணிக்கவாசகரைப் பற்றி "உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரைவிடப் புலமை, உழைப்பு, துன்பத்தை பொறுத்தல், இடையறா நிலைத்த பக்தி ஆகிய பண்புகளுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் வேறு யாரும் இல்லை'' என்று குறுப்பிடுகிறார்.

ஞான நெறியைப் பின்பற்றிய இவர் ஸ்ரீஆதி சங்கரரைப்போல் 32 ஆண்டுகளே வாழ்ந்து ஆனி மாதத்தில் மகம் நட்க்ஷத்திரத்தில், சிதம்பரத்தில் சாயுச்சிய முக்தியடைந்தார். (சிவனடி சேர்ந்தார்)

இந்த வருடம் 21.07.2019 சனிக்கிழமை ஆனி மாதம் மகம் நக்ஷத்திரம் வருகிறது. அன்றைய தினம் திருவாசகம் முழுக்க படிக்க முடியாவிட்டாலும் நமசிவாய வாழ்க என்ற சிவபுராணத்தையாவது ஜபித்து அந்த ஈசன் அருள் பெறுவோமாக.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**



# குலதெய்வங்கள் என்றால் என்ன?

1. குலதெய்வங்கள் என்பவை வெறும் கதைகளால் தோற்றுவிக்கப்பட்டதோ, ஆகாசத்திலிருந்து குதித்தவையோ அல்ல. அவை நம் முன்னோர்கள், அதாவது நம் தந்தை வழி பாட்டனுக்கு பாட்டனார் மற்றும் தங்கள் குலத்தை காப்பாற்றிய அல்லது தழைக்க செய்த இறைதூதர்கள் ஆவார்கள். இவர்களை தான் நாம் குலதெய்வங்களாக வழிபடுகின்றோம்.
2. குலதெய்வம் என்பது நமது முன்னோர்களின் புண்ணிய ஆத்மாக்கள் ஆகும். அந்த புனித ஆத்மாக்கள் தங்களின் குலத்தினை சார்ந்தவர்களை கண்ணும் கருத்துமாக பேணிக்காக்கும் வல்லமை படைத்தவை.
3. எமன் கூட ஒருவரின் குலதெய்வத்தின் அனுமதி பெற்று தான் உயிரை எடுக்க முடியும். எனவே தான் அந்த தெய்வங்கள் குலதெய்வங்கள் என்று சிறப்புடன் அழைக்கப்படுகின்றன.
4. குலதெய்வத்தை வழிபடும் குடும்பத்தினர் அனைவரும் பங்காளிகள் ஆவார்கள். இவர்கள் அண்ணன், தம்பி உறவு முறையாக கருதப்படுகிறார்கள். இவர்களுக்குள் பெண் கொடுக்கவோ, எடுக்கவோ மாட்டார்கள். ஏன் என்றால் இவர்கள் அனைவரும் ஒரே குடும்பம் ஆவர்.
5. குலதெய்வம் வழிபாடு இந்து சமயத்தினருக்கு முக்கியமான ஒன்றாகும். அடிப்படையில் நம்முடைய இந்து மதம் பற்றற்ற தன்மையை போதிக்கிறது. குலதெய்வ வழிபாடு மனிதனின் லௌகீக வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகிறது. அப்படியானால் குலதெய்வமும், இறைநிலையும் வேறுவேறா? அப்படி கிடையாது. அதாவது பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணரே இதைத் தெளிவாக சொல்லியிருக்கிறார். உலகத்தில் இன்பத்தையும், பற்றையும் ஒதுக்கிவிட்டு வாழ்வதற்கு எல்லோராலும் முடியாது. லௌகீக வாழ்வு வாழ்வபவர்களுக்குதான் இறைதூதர்களையும், தேவதைகளையும் இறைவன் படைத்திருக்கிறார். அவர்களே குலதெய்வங்கள் ஆவார்கள்.

தொடரும் .......

தொகுப்பு : **ஆசிரியர்**

## ஸ்வாமிகளின் ஆசிகள்

*07.06.2019* அன்று பெங்களூரில் கிரி நகரில் ஓய்வு எடுத்து வரும் நமது பரம பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளை வேதபாரதியின் செயலாளர் வெங்கட்ராமன் அவர்களும், திருப்பூர் புரவலர் ஸ்ரீ சந்திரசேகரன் அவர்களும் சந்தித்து ஆசிபெறும் வாய்ப்பு கிட்டியது. ஸ்வாமிகளின் ஆக்ஜையின் பேரில் நடந்து வரும் ஸந்த்யா வந்தன பயிலரங்க நிகழ்ச்சியை பற்றி மிக விபரமாக கேட்டறிந்தார்கள். குறைந்தது 15 நாட்களாவது முகாம் நடத்தினால் குழந்தைகளுக்கு நல்ல ஸம்ஸ்காரங்கள் தொடர் பயன் அளிக்கும் எனவும் அடுத்த ஆண்டு முதல் கடைப்பிடிக்கவும் கட்டளை இட்டார்கள். மேலும் பாரத நாட்டின் கொடை பகவத்பாதாள் ஸ்ரீ ஆதி சங்கரர் நேரடி சிவ அவதாரம் எனவும், சங்கர ஜெயந்தி மிக நன்றாக நடத்த வேண்டும் எனவும், பள்ளிக் குழந்தைகளையும் சேர்த்து செய்ய வேண்டும் எனவும் அன்புக் கட்டளையிட்டார்கள். ஸ்ரீ சங்கர பகவத்பாதரைப் பற்றி பேசும் போது கண்களில் துளிகள் நிரம்ப ஸ்வாமிகள் ஸனாதன தர்மத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், ஆச்சார்யர் மீது வைத்திருக்கும் மேன்மையும் புரிந்தது. நம் வேதபாரதி குழு மூலம் ஸ்வாமிகளின் அருளானையை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்வோம்.

அன்புடன் : **R.V.**

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி
**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**
எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை – 600 042.
Cell : 94434 95950
Email - vedabharathichennai@gmail.com



## 4. சுபாஷிதம்

''சுபாஷிதம்'' என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். சம்ஸ்கிருத பாடம் கற்றுக்கொள்ளும் போது இத்தகைய சிறு சிறு ஸ்லோகங்களை கற்றுத்தருவார்கள். இந்த வகையான ஸ்லோகங்கள் சொல்வதற்கு கம்பீரமானதாகவும் அந்த மொழியின் மீது ஒரு பிடிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தும் என்பது மறைபொருளாக இருந்தபோதிலும், இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக, எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**1. குணீ குணம் வேத்தி ந வேத்தி நிர்குணோ பலி பலம்**
**வேத்தி ந வேத்தி நிர்பல :**
**பிகோ வஸந்தஸ்ய குணம் ந வாயஸ : கரீ ச ஸிம்ஹஸ்ய பலம் ந மூஷக :**

பொருள் : குணவானைக் குணமற்றோன் அறியான். வலியோனை எளியோன் அறியான். வசந்தத்தின் குணத்தைக் குயிலன்றிக் காகமறியாது. சிங்கத்தின் பலத்தை யானையன்றி மூஞ்சூறு அறியாது.

**2. அவ்யாகரணமதீதம் பின்னத்ரோணயா தரகிணீதரணம்**
**பேஷஜமபத்யஸகிதம் த்ரயமிதம்க்ருதம் வரம் ந க்ரதம்**

பொருள் : இலக்கணமறியாக் கல்வி, துளையுற்ற படகு, பத்தியமற்ற மருந்து இம்மூன்றாலும் பயனின்மை அதிகம். தவிர்த்தல் வரம்.

**3. ஆலஸ்ய குதோ வித்யா அவித்யஸ்ய குதோ தனம்**
**அதனஸ்ய குதோ மித்ரம் அமித்ரஸ்ய குதோ ஸுகம்**

பொருள் : சோம்பேறிக்கு ஏது கல்வி? கல்லானுக்கு ஏது செல்வம்? வறியோனுக்கு ஏது நட்பு? நட்பற்றோனுக்கு ஏது சுகம்?

**4. ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம்**
**ஸர்வதேவநமஸ்கார; கேசவம் ப்ரதி கச்சதி.**

பொருள் : வானிலிருந்து விழும் மழை நதிகளில் கலந்து கடலை அடைகிறது. எல்லா தெய்வங்களுக்கும் செலுத்தும் வணக்கங்கள் அத்தனையும் கேசவனை அடைகின்றன.

**குறிப்பு** : 4வதாக வரும் இந்த மந்திரத்தை நாம் தினமும் சந்த்யாவந்தனம் செய்யும் போது ''சூர்யநாராயண வந்தனம்'' செய்யும் போது சொல்லுகிறோம்.

தொடரும்....

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

என்றும் ஆன்மீக பணியில் :
**பிரம்மஸ்ரீ முனிஸ்வர ஸாஸ்திரிகள்**
ஸ்தாபகர் ஸ்ரீ வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட், சென்னை.

# பிரதக்ஷிணம்

கோயில்களில் தெய்வங்களை வணங்கியபிறகு கோயிலை மூன்று முறை சுற்றிவருவது ஒரு மரபாகும். இதைத்தான் ‘பிரதக்ஷிணம்’ என்பார்கள்.

**‘வேதபாரதி செய்திகள்’** வாசகர்களுக்காக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை **‘பிரதக்ஷிணம்’** வர தீர்மானித்து இதுவரையில் 8 பிரதக்ஷிணம் வந்துள்ளோம்.

இந்த மாதம் “சிவலிங்கத்திற்கு தேனால் அபிஷேகம் செய்யும் போது லிங்க பாணத்தில் கையில் கிளியுடன் அம்மன் தோன்றும்” அதிசய கோயிலில் பிரதக்ஷிணம் வருவோம்.

## பிரதக்ஷிணம் (9)

## சிவலிங்கத்திற்கு தேனால் அபிஷேகம் செய்யும் போது லிங்க பாணத்தில் கையில் கிளியுடன் அம்மன் தோன்றும் அதிசயம்



விழுப்புரம் மாவட்டம் ரிஷிவந்தியம் என்கிற கிராமத்தில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில்தான் மேற்கண்ட அதிசயம் தினமும் நடக்கிறது. இந்த கோயில் துவாபரயுகத்தில் தோன்றியது என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தேவர்களின் தலைவனான இந்திரன் தினமும் இக்கோயிலில் உள்ள சிவலிங்கத்திற்கு 108 குடம் பால் அபிஷேகம் செய்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். ஆனால் அம்மனை வழிபடாமல் சென்றுவிடுவான். கோபம் கொண்ட அம்மன் தன்னை வழிபடாமல் போகும் இந்திரனுக்கு பாடம் புகட்ட நினைத்து ஒரு நாள் பால் குடங்களை மறைத்து வைத்துவிட்டாள். பால் குடங்கள் காணாமல் போனதைக் கண்ட இந்திரன் தான் ஏதோ தவறு செய்துவிட்டதாக நினைத்து அங்கிருந்த பலிபீடத்தில் தன் தலையை மோதி உயிர் விட முயற்சித்தான். அப்போது அவன் முன் தோன்றிய ஈசன் “நீ தினமும் எனக்கு மட்டும் பால் அபிஷேகம் செய்கிறாய், பார்வதிக்கு செய்வதில்லை. இனி பார்வதிக்கும் பால் அபிஷேகம் செய்” என்று கூறி “எனக்கு அபிஷேகம் செய்யும்போது எனது உருவத்துடன் இணைந்து பார்வதியும் தோன்றுவாள்” என்று கூறி சிவன் மறைந்தார். அன்று முதல் இன்று வரை சிவலிங்கத்திற்கு தேன் அபிஷேகம் செய்யும் போது பாணலிங்கத்தில் அர்த்தநாரி ஈஸ்வரனாக ஆண் பாதி, பெண் பாதி தோற்றத்தில் கையில் கிளியுடன் அம்மனும் தோற்றமளிக்கின்றார். மற்ற நேரங்களில் லிங்கம் மட்டுமே தோன்றும்.

பல ரிஷிகள் இங்கு வந்து தங்கி ஈசனை வழிபட்டதால் இந்த ஊருக்கு **ரிஷிவந்தியம்** என பேர் ஏற்பட்டது. கோயில் அம்பாளின் பெயர் “முத்தாம்பிகை” காலை 8.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலையில் 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை கோயில் திறந்திருக்கும்.

பிரதக்ஷிணம் தொடரும்...

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**



## குரு பூர்ணிமா - 16.07.2019

இந்த ஆண்டு குரு பூர்ணிமா விழா 16.07.2019 அன்று நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலத்தில் மன்மலை மற்றும் தத்தமலை – தத்தாஸ்ரமத்தில் அனைந்துள்ள குருமார்களின் ஸ்தலங்களில் ஸ்ரீ மஹா மேருமண்டலி சிஷ்யர்களால் நடைபெற உள்ளது.

மேலும் தொடர்புக்கு : **9444075811**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 35

எந்த வயதில் "டீன் ஏஜ்" எப்போது துவங்குகிறது எனும் முதல் கேள்விக்கு பலர் 12, 13, 14 என்று பதில் கூறினர்.

ஆம், வேதபாரதி அமைப்பு கோயம்புத்தூரில் ராம்நகர் -ஐயப்ப பக்த சமாஜத்தில் திரு. விஜயன் அவர்களின் பேருதவியோடு நடத்திய "யுவஸ்ரீ" நிகழ்வில் நான் கேட்ட கேள்விக்கு கிடைத்த பதில்கள் தான் மேற்கூறியது.

"டீன் ஏஜ்" என்பது பத்து வயது முதலே இன்றைய காலத்தில் துவங்குகிறது என்று நான் கூறிய பொழுது கொஞ்சம் ஆச்சரியம். அதிர்ச்சி மற்றும் சந்தேகத்துடன் என்னை அனைவரும் பார்த்த பார்வை இன்னும் என் மனதிலாடுகிறது.

இதை இன்று பல மன நிலை நிபுணர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

குழந்தைகளுக்கு ஆரம்பத்திலிருந்து அளிக்கப்படும் மருந்துகள், சத்தான உணவுகள் அதிலும் குறிப்பாக வெளிநாட்டு உணவு வகைகள், தனிக்குடித்தனம் என்பதால் பெற்றோர்களின் பேச்சு மற்றும் நடத்தை ஆகியவற்றை நேரில் காண்பது, தொலைகாட்சி மற்றும் சமூக ஊடகங்கள் அளிக்கும் தொடர் தகவல்கள், விளம்பரங்கள் வெட்ட வெளிச்சமாக்கும் அனைத்து விஷயங்கள் என்று பல காரணங்களை கூறலாம்.

"அவன் / அவள் இன்னும் குழந்தை தானே" என்று தயவு செய்து எண்ண வேண்டாம்.

3 வயதில் எல்.கே.ஜி என்றால் 5/6 வயதில் முதல் வகுப்பு. நான்கு ஆண்டுகளில் 9 / 10 வயதாகி விடுகின்றது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

கேள்வி 2 : "டீன் ஏஜ்" என்றால் பெற்றோர்களுக்கு வரும் பயம் என்ன?

1. படிப்பு - மதிப்பெண்கள்



2. மரியாதையில்லாமல் இருப்பது.
3. கேட்ட கேள்விக்கு பதில் கூறாத அலட்சியம்
4. எவ்வித நோக்கம் / இலக்கு இல்லாத குணம்
5. மோசமான பேச்சுக்கள்
6. சதா போனும் கையுமாக' இருப்பது.
7. பொட்டு வைப்பதில்லை, தலை விரித்து போட்டுக் கொள்ளவது.
8. இஷ்டப்படி உடைகளை அணிவது.
9. கேர்ள்ஃபிரண்டு / பாய் ஃபிரண்டு பிரச்சினை
10. குடி, போதை மருத்துவ கவலை
11. இந்திய கலாச்சாரம், ஹிந்து மதம் என்றாலே ஓடுவது.
12. சதா பொய் பேசுவது
13. கண்ணாடி முன்பு நின்று கொண்டேயிருப்பது.
14. யாரையும் மதிப்பதில்லை. வீட்டில் உள்ளோரிடம் பேசுவதில்லை.
15. வீட்டிலோ, வெளியிலோ எந்த வேலையும் செய்யாமலிருப்பது.
16. கோபமும், ஆத்திரமும் உச்சகட்டமாக இருப்பது.
17. ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஓர் அவமானகரமான பெயர் வைப்பது.
18. பள்ளியில் நடப்பதை வீட்டில் சொல்வதில்லை.
19. 'என் ஃபிரண்ட்ஸ் பற்றியாரும் பேசக்கூடாது' எனும் கட்டளை.
20. தான் என்னவாக ஆகப் போகிறோம் எனும் குறிக்கோள் பற்றி பேசாமலே இருப்பது.

இவற்றையெல்லாம் தாண்டி "காதல்" எனும் மூன்றெழுத்து மந்தரத்தை கண்டு பயப்படாத பெற்றோர்கள் உண்டா?

ஒட்டுமொத்தமாக அன்றலர்ந்த ரோஜாவாக இருந்த குழந்தை இப்பொழுது சதா முள்ளால் குத்துகிறது.

**"வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு"**

(அதிகாரம் - 89 (உட்பகை) - குறள் - 882)


"வாளாயுதம் என்பது நேராக, எதிர்க்கு எதிர் போரிடும் ஆயுதம் என்பது மற்ற காலத்தில் துன்பம் செய்ய இயலாது. ஆனால் நண்பன் போல் உடனிருந்து கொண்டு, சதா துன்பம் செய்யக் கருதுகின்ற உட்பகைவர்களைப் பற்றி எப்போதும் அச்சத்துடன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்கிறார் வள்ளுவர் பெருமான்

யோசியுங்கள்!

தொடரும்....

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

### மதமாற்றம் ஒரு மடமையே



"உனது மதத்தையும், ஜாதியையும் நான் மாற்றிவிட்டேன்" என்று ஒரு மதப்பிரசாரகர் ஒருவனிடம் கூறினார். சில நாட்கள் கழித்து, மதம் "மாற்றப்பட்ட" அம்மனிதர். மதப் பிரசாரகரை விருந்துக்கு வருமாறு தனது வீட்டுக்கு அழைத்தார். அவரும் அழைப்பை ஏற்றுக்கொண்டு விருந்துக்குச் சென்றார். மதம் மாறியவர் அவருக்குப் பன்றியின் மாமிசத்தைப் பரிமாறினார்.

விருந்தாளி : என்ன இது?

மதம் "மாறியவர்" : இது பன்றி மாமிசம், ஐயா

விருந்தாளி : என்ன! பன்றி மாமிசமா? நான் இதையெல்லாம் சாப்பிடமாட்டேன். உடனே என் தட்டிலிருந்து அதை எடுத்துவிடு.

இதைக்கேட்டு விருந்தளிப்போன் சிறிதும் கவலைப்படவேயில்லை.

மதம் "மாறியவர்" : நீங்கள் தான் என்னை மதம் மாற்றிவிட்டதாக கூறினீர்களே! நான் கொடுக்கும் உணவை ஏன் தாங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள்?

விருந்தாளி : பன்றி மாமிசம் அசுத்தமானது

மதம் "மாறியவர்" : நீங்கள் என் மீது நீரைத் தெளித்து, என் மதத்தையும், ஜாதியையும் எப்படி மாற்றி விட்டீர்களோ, அப்படியேதான் நானும் இதன் மீது நீரைத் தெளித்து இதை ஆட்டிறைச்சியாக மாற்றிவிட்டேன். எனவே, உங்கள் நிலையிலிருந்து பார்த்தால், இது இப்பொழுது பன்றி மாமிசமேயல்ல, ஆட்டிறைச்சிதான். இதைச் சாப்பிடத் தாங்கள் தயங்குவது மிகவும் ஆச்சர்யமாக இருக்கிறது.

மதப் பிரசாரகரால் இதற்குப் பதிலேதும் கூற முடியவில்லை.



இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவனை, நீரைத் தெளித்தோ அல்லது வேறு ஏதாவதொரு சடங்கினாலோ வேறு மதத்திற்கு மாற்றிவிட்டதாகக் கூறினால், அதை நமது சாஸ்திரங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஸநாதன தர்மத்தை அனுஷ்டிப்பதை ஒருவன் நிறுத்திக் கொண்டால், அவன் தர்மப் பிரனாக ஆகிறான்; அதாவது தர்மத்திலிருந்து நழுவியவனாகிறான். பல்வேறு பாவங்களுக்கு நமது மதத்தில் பிராயச்சித்தங்கள் கூறப்பட்டுள்ளன. சாஸ்திரங்கள் விதித்த கட்டளைகளைக் கடைப்பிடிக்காததற்காகச் சொல்லப்பட்டப் பிராயச்சித்தத்தைச் செய்துவிட்டு அவன், "மதமாற்றம்" என்று அப்படி எதுவுமே, எப்பொழுதுமே நடக்காதது போல், மீண்டும் பழையபடியே தனது தர்மத்தை பின்பற்றிக்கொண்டு வரலாம்.

- தொடரும்...

## புதுச்சேரி வேதபாரதி கிளை சிறப்பு நிகழ்ச்சி 16.06.2019

நமஸ்காரங்கள், புதுச்சேரி வேதபாரதி கிளை சார்பாக 16.06.2019 அன்று பௌர்ணமி பூஜை 108 ஸுவாகினிகள் அமர்ந்து ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. மேலும் அந்தண சிறுவர்கள் பெரியவர்களுக்கு வேத வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது. French Institute ஸ்ரீமான் வெங்கட்ராமன் அவர்களும், திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் ஜி அவர்களும் சிறப்பு சொற்பொழிவு செய்து நம் நித்ய கர்மாக்கள் குறித்தும், உடல், மனம் குறித்தும் நல்ல கருத்துக்களை வழங்கினார்கள். பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு 10% இட ஒதுக்கீடு தொடர்பான பல நல்ல உபயோகமான கருத்துகளை ஸ்ரீ சந்திரசேகர் மற்றும் NJL ரவி வழங்கினார்கள். ஸ்ரீ NJL ரமேஷ் வரவேற்புரை வாசித்து, ஸ்ரீ சந்திரசேகர் முன்னிலை கருத்துக்கள் வழங்கினார்கள். சமஸ்கிருத வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு ஆசிரியர்களை அறிமுகப் படுத்தினார்கள்.

ஸ்ரீ ரவி (IT) ஸ்ரீ பட்டாபிராமன், ஸ்ரீராகவன், ஸ்ரீ ரகோத்மன் (LIC), ஸ்ரீவேதராமன், ஸ்ரீ பாலு ஆகியோர்கள் மிகச்சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். எப்போதும் போல் ஸ்ரீமான் கல்யாணம் (ஸ்வாமிநாதன் கேட்டரிங்) கை மணத்தில் எல்லோருக்கும் உணவு வழங்கப்பட்டது. ஸ்ரீ சங்கர வித்யாலயா குமார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

- ஆசிரியர்

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



மஹாபெரியவா முக்காலமும் அறிந்த பரமேஸ்வரன், பெரியவாளுடன் அனேகம்பேருக்கு பலவிதமான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. தம்முடைய அடியவர்களின் வாழ்வில் நடக்கப்போவதை, நடந்ததை தம்முடைய ஞானதிருஷ்டியால் அறிந்து அவர்களை கடாக்ஷித்தவர். அதே போல் பலருக்கும் எழுந்த பலவிதமான சந்தேகங்களை, யாராலும் விளக்க முடியாத சந்தேகங்களை, எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் அற்புதமாக விளக்கியுள்ளார். அப்படிப்பட்ட சந்தேகங்களையும் அதற்கு மஹாபெரியவா அளித்த அற்புத விளக்கங்களையும் மாதம் ஒரு விளக்கத்தை நம் வாசகர்களுக்காக இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம். இது பலருக்கும் அறிந்திருக்கும் இருப்பினும் தெரியாதவர்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த பகுதி.

### தமிழ்மாதங்களின் பெயர்கள் எப்படி வந்தன

**ஆடி மாதம் :**

ஆஷாட நடசத்திரத்தில் "பூர்வ ஆஷாடம்" "உத்ர ஆஷாடம்" என்று இரண்டு உண்டு. பூர்வம் என்றால் "முன்", உத்ரம் என்றால் "பின்" பூர்வ/உத்தர ஆஷாடம் என்பதில் உள்ள அந்த "ரவ்" என்ற கூட்டெழுத்து சிதைந்தும் "ஷ" உதிர்ந்தும் போக, தமிழில் பூராடம், உத்திராடம் என்கிறோம். இந்த இரண்டு நட்சத்திரங்களில் ஒன்றில் பௌர்ணமி வரும் மாதம் ஆஷாடி. இதில் "ஷ" உதிர்ந்து "ஆடி" ஆயிற்று.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**





## நம்ம தர்மசாலாவில் ஏழை புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப் பட்டியல்

| நாள் | காலை 6.00 மணி | காலை 7.00 மணி | மதியம் 11.45 மணி | மாலை 3.30 மணி | இரவு 6.75 மணி |
|---|---|---|---|---|---|
| திங்கள் | காபி, பால் | இட்லி, கிச்சடி காய்கறி சாம்பார் கேழ்வரகு கஞ்சி | வெண்டைக்காய் சாம்பார், கேரட் கறி, சுரைக்காய் கூட்டு பருப்பு ரசம், மோர் | பால், டீ கொண்டக்கடலை சுண்டல் | சாம்பார் சாதம் உருளைக்கிழங்கு கறி, ரசம், மோர் |
| செவ்வாய் | காபி, பால் | இடியாப்பம் சப்பாத்தி, குருமா கேழ்வரகு கஞ்சி | முருங்கைக்காய் சாம்பார், அவரைக்காய் கறி, கீரை கூட்டு தக்காளி ரசம்,மோர் | பால், டீ கொண்டக்கடலை சுண்டல் | புளியோதரை கோஸ் கறி ரசம், மோர் |
| புதன் | காபி, பால் | இட்லி, பொங்கல் கொத்சு கேழ்வரகு கஞ்சி | மோர் குழம்பு, பீன்ஸ் பருப்பு உசிலி, பரங்கிக்காய் கூட்டு, பருப்பு ரசம், மோர் | பால், டீ கொண்டக்கடலை சுண்டல் | தக்காளி சாதம் கத்தரிக்காய் கறி ரசம், மோர் |
| வியாழன் | காபி, பால் | இட்லி, சாம்பார் பூரி, தால் கேழ்வரகு கஞ்சி | முள்ளங்கி சாம்பார், வெண்டைக்காய்கறி,சௌசௌ கூட்டு, தக்காளிரசம், மோர் | பால், டீ கொண்டக்கடலை சுண்டல் | எலுமிச்சை சாதம் கேரட் கறி, ரசம், மோர் |
| வெள்ளி | காபி, பால் | இடியாப்பம், குருமா பொங்கல் கேழ்வரகு கஞ்சி | கதம்ப சாம்பார், புடலங்காய் கறி, பரங்கிக்காய் கூட்டு பருப்பு ரசம், மோர் | பால், டீ கொண்டக்கடலை சுண்டல் | வெஜிடபள் புலாவ் உருளைக்கிழங்கு கறி, ரசம், மோர் |
| சனி | காபி, பால் | இட்லி, ரவா சேமியா உப்புமா, சாம்பார் கேழ்வரகு கஞ்சி | பூசணிக்காய் சாம்பார் கேரட் கறி, புடலங்காய் கூட்டு பூண்டு ரசம், மோர் | பால், டீ கொண்டக்கடலை சுண்டல் | ஸ்ரீ அனந்த பத்மநாப ஸ்வாமி திருக்கோவில் பிரசாதம், பீன்ஸ் கறி ரசம், மோர் |
| ஞாயிறு | காபி, பால் | கேழ்வரகு இடியாப்பம், பூரி மசாலா கேழ்வரகு கஞ்சி | பாகற்காய் சாம்பார், கோஸ் கறி, சௌசௌ கூட்டு பருப்பு ரசம், மோர் | பால், டீ கொண்டக்கடலை சுண்டல் | பூண்டு வெங்காயம் வத்தகுழம்பு, பீட்ரூட் கறி ரசம், மோர் |



### துணை ஆட்சியர் (ஓய்வு) எழுதிய அன்பு மடல்...

ஆ.மகாலிங்கம், துணை ஆட்சியர் (ஓய்வு) 31.5.2019
விருது நகர் மாவட்டம்

ஐயா, தங்களது தபால் ஒன்று கிடைக்கப்பெற்றது. தாங்கள் பத்தொன்பது ஆண்டுகளாக சீரும் சிறப்புடன் நிர்வகித்து வந்த "ராஜஸ்தான் தர்மசாலா"வை கேன்சர் ஆஸ்பத்திரி நிர்வாகம் உங்களிடமிருந்து எடுத்துக் கொண்டது எனக்கு வேதனையாக இருந்தது. என்ன சொல்வது?! தங்களது சேவையை மனம் தளராமல் "நம்ம தர்மசாலா" மூலம் தொடர்வது மகிழ்ச்சியாக உள்ளது. இக்கட்டான சூழ்நிலையிலும் தாங்கள் மனிதநேய சேவையை விட்டுவிடாமல் மனம் தளராமல் தொடர்ந்து நடத்திட உறுதி பூண்டுள்ளது பற்றி சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. நல்லவர்களையும், நல்லவர்கள் சேவைகளையும் இறைவன் கைவிடுவதில்லை. "நம்ம தர்மசாலா" மூலம் உங்களது பணி முன்பைவிட சிறப்பாக நடக்கும். வாழ்த்துகிறேன்.

இத்துடன் என்னால் இயன்ற நன்கொடைத் தொகை ரூ.1000/-ஐ பாளயங்கோட்டை IOBயில் உங்களது வங்கிக் கணக்கில் செலுத்தி உள்ளேன். ரசீதினை எனது முகவரிக்கு அனுப்ப அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள
[signature]

**அன்பு நிறைந்த வாசகர்களே, ஏழை புற்றுநோயாளிகள் உண்ணும் உணவில் உங்கள் பெயரும் இருக்க வேண்டும் என்று ஸ்ரீ மாதா டிரஸ்ட் விரும்புகிறது.**

சற்றும் தாமதிக்காமல் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும், அடையாறு புதிய கேன்சர் மருத்துவமனைக்கு அருகாமையில் இருக்கும் "நம்ம தர்மசாலா"விற்கு விஜயம் செய்யுங்கள். எங்களது செயல்பாடுகளை நேரில் கண்டறியுங்கள். இங்கு தங்கி பயன்பெறும் ஏழை புற்றுநோயாளிகளிடம் உரையாடுங்கள்; நோயாளிகள் இங்கு எப்படி இருக்கிறார்கள் என்பதை அவர்களிடமே கேட்டுத் தெரிந்துகொண்டு பின்பு உங்கள் உதவியை செய்யுங்கள்.

**உங்கள் உதவி ஒரு உயிரை காத்திடும் என்றால் அதைவிட வேறு இன்பம் இருக்க முடியாது அல்லவா?**

**அளிக்க நினைக்கும் நன்கொடையை இன்றே அளிப்பது சாலச் சிறந்தது. அதுவே தருமம் செய்வதற்கான நியதி!**







ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா,
ஓம் நமோ நாராயணாயா.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 3



பாரதப் போர் பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றது. எனினும் அன்று போர்க்களத்தில் போதிக்கப்பட்ட கீதை இன்றும் நமது நல்வாழ்வுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து வருகிறது. அத்தகைய சிறப்பு மிக்க கீதை போதிக்கும் தர்மத்தைச் சரியாகப் புரிந்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு இந்தியனுக்கும் உள்ளது.

"போர் செய்யமாட்டேன்" என்று கூறிய அர்ஜுனனை கண்ணன் வற்புறுத்தி போர் புரியவைத்து பாட்டனாரையும், ஆச்சாரியாரையும் படுகொலை செய்யும்படி செய்துவிட்டான். அதனால் "பகவத்கீதை" வன்முறையைத் தூண்டும் நூல் என்றும், பகவத் கீதையை படிக்கக்கூடாது என்றும் ஒரு சிலர் இன்றும் கூறுகிறார்கள். பகவானின் நோக்கமெல்லாம் எதிரிகளை கொல்வதிலேயே இருப்பதால் "பகவத் கீதை" ஒரு கொலை நூல் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். கீதையை மேலோட்டமாக படிப்பவர்கள் தான் அப்படிச் சொல்வார்கள். அறிவற்றவர்கள் ஒரு நூலை முறையாக படித்து அறிந்துக்கொள்ளவில்லையானால் அது நூலின் குற்றமாகாது. அமிர்தத்தை ஒரு சிலர்விஷமாக்குவார்கள். அது அமிர்தத்தின் குற்றமாகாது. "நல்லோரைக் காப்பதற்கும் தீயோரை அழிப்பதற்கும் யுகம் தோறும் நான் அவதரிக்கிறேன்" என்று பகவானே கூறியிருக்கிறார். மேலும் "அர்ஜுனா இவர்களைக் கொல்ல ஏன் பயப்படுகிறாய் இவர்கள் எல்லாருமே முன்பே என்னால் கொல்லப் பட்டுவிட்டார்கள். இப்போது இவர்களைக் கொல்வதற்கு நீ ஒரு கருவிமட்டுமே" என்கிறார். பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உற்ற தோழன், அர்ஜுனன் நல்ல

கல்விபெறவும் யுத்த பயிற்சி பெறவும், ராஜ்யம் நிறுவுவதற்கும் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவும், எதிரியினிடமிருந்து மீள்வதற்கும், திரவியம் தேடவும் இப்படி அநேக விதங்களில் உதவியதுடன் தன் தங்கையையே அர்ஜுனனுக்கு மணம் முடித்தும் கொடுத்தான். அப்படிப்பட்ட கண்ணனா கொலை செய்ய தூண்டுவார்? பகவத் கீதை ஒரு ஞான நூல், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் “பரமாத்மா”, அர்ஜுனன் “ஜீவாத்மா”, துரியோதனாதிகள் “காமக் குரோதங்கள்”, ஜீவாத்மாவான அர்ஜுனன் காம குரோதங்களை கொன்றுவிட்டு பரமாத்மாவான பகவானை அடையவேண்டும் என்ற தத்துவத்தைத்தான் இது உணர்த்துகிறது.

பகவத்கீதை வாழ்க்கைக்கு வேண்டிய எத்தனையோ உபாயங்களைக் கூறுகிறது. சந்தேகத்தினால் வரும் தீங்குகளையும் அவற்றை தடுப்பது எப்படி என்பதையும் கூறுகிறது. மனிதனுக்கு அன்றாடம் தேவையான உணவு வகைகளைக் கூறுகிறது. நான்கு வர்ணத்தாரைக் கூறி அவர்களை கர்மங்களைப் பற்றியும் கூறுகிறது. யாகம், தானம், தவம், புத்தி, மனஉறுதி, சுகம் எல்லாவற்றையும் அறியும் வழிபற்றி பகவான் விரிவாக விளக்குகிறார். பகவான் எதையுமே விட்டுவைக்கவில்லை எல்லாவற்றையும் கூறுகிறார்.

பகவத்கீதையின் பெருமைகள் :

“ஸ்ரீமத் பகவத் கீதை” பகவானை விட பெருமை வாய்ந்தது என்று சொன்னாலும் அது மிகையாகாது. பகவானே இதைக் கூறுகிறார்.

**கீதாஸ்ரயேஹம் திஷ்டாமி கீதா மே சோத்தமம் க்ருஹம்**
**கீதாஜ்ஞாநமுபாஸ்ரித்ய த்ரீந்லோகாந் பாலயாம்யஹம்.**

(வராஹ புராணம்)

கீதையை அண்டி நான் வாழ்கிறேன். கீதைதான் என்னுடைய சிறந்த வீடு, கீதையின் ஞானத்தைக் கைக்கொண்டு நான் மூவுலகங்களையும் காக்கிறேன்.

பகவான் அர்ஜுனனிடத்தில் பகவத் கீதையைப் பற்றி சொல்லும் போது

**கீதா நாமானி வக்ஷ்யாமி குஹ்யானி ஸ்ருணுபாண்டவ/**
**கீர்த்தனாத் சர்வபாபானி விலயம் யாந்தி தந்க்ஷணாத்//**

கீதை என்னுடைய இதயம், என்னுடைய தத்துவம், எனது



ஒளிர்கின்ற அறிவு, எனது அழியா ஞானம், கீதா ஞானத்தினால் மூவுலகையும் பாலிக்கிறேன், கீதையின் ரகஸ்யமான நாமங்களை உச்சரித்தால் எல்லா பாவங்களும் நாசமடைகின்றன.

சாஸ்திரங்கள் எல்லாம் வேதங்களிலிருந்து தோன்றியவை. வேதங்கள் பிரம்மதேவனின் திருமுகத்திலிருந்து வெளிவந்தது, பிரம்மனோ பகவானின் உந்திதாமரையில் உதித்தவன், ஆனால் பகவத் கீதையோ பகவானுடைய முகத்தாமரையிலிருந்து நேராக வெளிவந்தது, அதனால் அது மற்ற சாஸ்திரங்களை விட சிறந்தது, இதை பகவான் வேதவியாஸரே கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

**கீதா ஸுகீதா கர்தவ்யா கிமந்யை ஸாஸ்த்ரஸங்க் ரஹை/**
**யா ஸ்வயம் பத்மநாபஸ்ய முகபத் மாத் விநி ஸ்ருதா//**

(மஹாபாரதம் பீஷ்மபர்வம் 43/1)

கீதையை நல்ல முறையில் கேட்க வேண்டும், பாட வேண்டும், படிக்க வேண்டும், கற்பிக்க வேண்டும், மனனம் செய்ய வேண்டும், மனமதில் தரிக்க வேண்டும். கீதை பகவான் பத்மநாபனின் முகத்தாமரையிலிருந்து வெளிவந்தது, எனவே கீதையை செவ்வனே ஓதல் வேண்டும், பிற சாஸ்த்ர நூல்கள் எதற்கு?

மஹாபாரதம் பீஷ்ம பர்வதம் 43/2-ல் “ஸர்வ ஸாஸ்த்ர மயீ கீதா” அதாவது உலகில் எத்தனை அறநூல்கள் இருக்கின்றனவோ, அவையனைத்திற்கும் ஸாரமானது கீதா ஸாரம் என்று கூறப்பட்டுள்ளது.

கீதை காயத்ரியை விடச் சிறந்தது, காரணம் காயத்ரி ஜபம் செய்பவன் ஒருவன் மட்டுமே முக்தி பெறமுடியும். ஆனால் கீதையை பாராயணம் செய்பவன் தானும் கரையேறி பிறரையும் கரையேற்றுவான்.

தொடரும்....

**டி.சூரியநாராயணன்**

**குறிப்பு :**
**வேதபாரதி செய்திகள் புத்தகம் பிரதிமாதம் 12ம் தேதிக்குள் தங்களுக்கு தபால் மூலம் கிடைக்கவில்லை என்றால் 9443495950 / 9445102193 என்ற கைபேசி எண்ணிற்கு தங்கள் முகவரி, பின் கோடு மற்றும் தொலைபேசி எண்ணை SMS செய்யவும். உடன் தபாலில் அனுப்பி வைக்கிறோம்.**
**- வேதபாரதி**

# "பூ" சூடல்

இறைவன் எத்தனையோ அழகானவற்றை படைத்தான். அவற்றில் முதல் இடத்தைப் பிடித்திருப்பது பூக்கள்தான். நல்ல அழகான, மணமுள்ள பூக்களை விரும்பாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் குறிப்பாக பெண்கள்.

தலையில் பூ வைத்துக் கொள்வது எல்லா பெண்களுக்கும் மிகவும் பிடித்தமான ஒன்று. அப்படி பெண்கள் தலையில் சூடிக்கொள்ள பூக்களை வாங்கும்போதும் அதைத் தலையில் சூடிக்கொள்ளும் போதும் கடைபிடிக்க வேண்டிய முறைகள் பல உள்ளன.

நெற்றிக்குப் பொட்டு இட்டவர்களிடம் பூக்கள் வாங்குவது உத்தமானது. சுமங்கலிகளிடம் தான் பூ வாங்கவேண்டும் என்ற ஒரு நெறி ஒரு காலத்தில் இருந்தது.

பெண்கள் பூவினை வாங்கும்போது சேலை முந்தானைத் தொங்கவிட்டுக்கொண்டு வாங்கக்கூடாது. பூவினை துணிப்பையில் போட்டுத்தான் எடுத்துச் செல்ல வேண்டும்.

அதிக இடைவெளி விட்டு பூக்களை தொடுப்பது தவறு. அவ்வாறு கட்டிவிற்கும் பூக்களை வாங்குவதும் தவறு. இது உறவுகளிடம் இடைவெளியை அதிகரிக்கும் என்று அகத்தியர் கூறுகிறார்.

அந்தி சாயும் நேரத்தில் பூ வாங்கக்கூடாது. பூக்கள் வாங்கும் போது பணத்தை கைகளுக்குள் மூடிக்கொண்டு கொடுக்கக்கூடாது. கைகளை விரித்துதான் கொடுக்க வேண்டும்.

திருமணத்தில் உபயோகித்த பூக்களை வாங்கி தலையில் வைத்தக் கொள்ளக்கூடாது.

நடுத்தெருவில், தெரு முனைகளில் பூக்களை வாங்கி அங்கேயே பூச்சூடிக் கொள்ளக்கூடாது. பூக்களை வாங்கினால் அதை முதலில் தெய்வத்திற்கு சூட்டியபிறகு கணவன் முன்னிலையில் அல்லது அந்த தெய்வ படத்திற்கு முன்னால் அல்லது வயதான சுமங்கலியின் முன்னால்தான் தலையில் சூடிக்கொள்ள வேண்டும்.



ஒற்றை மலராக கொண்டையில் குத்தி செருகுதல் தவறு. பூக்களை சூடிக்கொள்ளும் போது காதில் மேல் நுனிக்கும், காதின் கீழ் நுனிக்கும் இடையில் உள்ள பின்புறத் தலையில்தான் வைத்துக் கொள்ள வேண்டும். கழுத்துப் பகுதியில் இறக்கியோ, ஜடையின் வால் பகுதியிலோ சூடிக்கொள்ளக்கூடாது.

சிறு பந்துபோல் உருண்டையாக வைத்துக்கொள்ள வேண்டும். தாலிக் கயிறு கட்டும் இடத்திற்கு கீழே முதுகில் பூவை வைத்துக்கொள்ளக் கூடாது. நடு வண்ணம் வகிடு எடுத்து வாரி ஆள்காட்டி விரலால் முடியைத் தூக்கி கட்டை விரலாலும் மோதிர விரலாலும் பூவைத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டு பக்கமும் தொங்கும் படியாக பூ வைத்துக் கொள்ளக்கூடாது. வளைகாப்பு விழாவிற்கு மட்டுமே பூவினை ஜடை முழுவதும் சுற்றி அலங்கரிக்க வேண்டும். மற்ற நேரங்களில் இவ்வாறு செய்யக்கூடாது.

காட்டு மல்லியுடன் வாசனையுள்ள மல்லியை சேர்த்து தலையில் சூடிக்கொண்டால் கெட்ட கனவு வரும். காகித பூக்களை சூடிக்கொண்டால் மனதில் சஞ்சலம் தோன்றும் என்று விஸ்வாமித்திரர் கூறுகிறார்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்.**

## இறங்கல் செய்தி

வேதபாரதியின் ஊரப்பாக்கம் குழுவின் முக்கிய அங்கத்தினராகிய **திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் அன்புத்தாயார் ஸ்ரீமதி நாகம்மாள்** (வயது 93) அவர்கள் ஆனி மாதம் 3-ம் நாள் திவிதியை திதி 18.06.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

அம்மையார் தனது வாழ்நாள் முழுவதும் ஏகாதசி விரதம், அனுஷ்டித்து வாழ்ந்தவர். பவித்ரமாக வாழ்நாளை வாழ்ந்து காண்பித்து, தன் சந்ததியரும் நம் பாரம்பர்யத்தை தொட முன் உதாரணமாக வாழ்ந்த அம்மா அவர்கள் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கியேன்.

வேதபாரதி

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.14. இன்னும் சில கேள்விகள் :

*சென்றமாத தொடர்சசி...*

*4. கர்மாவிற்கும் அதற்கேற்ற அடுத்த பிறவி எத்தகையதாக இருக்கும் என்பதற்குமான தொடர்பு பற்றி இன்னும் கொஞ்சம் விளக்க முடியுமா?*

சாஸ்திரங்கள் இப்பொருளைப்பற்றி விரிவாகப் பேசுகின்றன. சில உதாரணங்களைக் கூறலாம், தன் சக்திக்கு எந்த அளவுக்கு அதிகமாக முடியுமோ அந்த அளவுக்குத் தானம் செய்வது வசதியான வாழ்க்கையைத் தரும். ஒரு குடிகாரப் பிராமணன், பன்னியாய்ப் பிறப்பான், 100 அஸ்வமேத யாகங்களைப் பூர்த்தி செய்தவன் இந்திரனாய்ப் பிறப்பான். வயதானவர்களுக்கு, குறிப்பாக, வயதான தாய் தந்தையருக்குச் சேவை செய்தவன், உயர்ந்த மதிநுட்பம் பெறுவான். தந்தையைக் கொன்றவன் பைத்தியமாய்ப் பிறப்பான். மிருகங்களுடன் சேர்க்கை செய்பவன் அலியாகவோ, பேடியாகவோ பிறப்பான். மானை மாய்த்தவன், காலொன்றை இழப்பான். நரியைக் கொன்றவன் இரு கால்களையும் இழப்பான். கிளியைக் கொன்றவன் திக்குவாயன் ஆவான். இவ்வாறு எத்தனையோ...

*5. ப்ராப்தம் என்பது என்ன?*

கர்மாக்களில் மூன்று பிரிவுகள் உள்ளன. ஸஞ்சித், ப்ராரப்த, ஆகாமிய கர்மாக்கள் என்பவை அவை. ஒரு வாழ்க்கைக் காலத்தில், ஒருவன் அதிக அளவிலான கர்மாக்களைச் சேமிக்கிறான். அதன் ஒரு பகுதிதான் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவன் இறப்புக்குக் காரணமான மூன்று விரு;ததிகளாக (வாக்விருத்தி, மனோவிருத்தி, ப்ராணவிருத்தி) அமைகின்றன. இதை ஒட்டியே அடுத்த பிறவி அமைகிறது. இவ்வாறாக, முந்தையப் பிறவியிலிருந்து வந்த கர்மா,



இப்பிறவியின் ப்ராரப்தமாக அமைகிறது மீதமுள்ள கர்மா, ஸஞ்சித கர்மா எனப்படும். இந்த பிறவியில் சேமிக்கும் கர்மாக்கள் ஆகாமியம் எனப்படும். இறக்கும்போது, இது ஸஞ்சித் கர்மாவுடன் சேர்ந்து கொள்ளும். இந்த கூட்டக் கர்மாவின் ஒரு பகுதிதான், அடுத்த பிறவிக்கான அடித்தளமான மூன்று விருத்திகளாகின்றன. சில சமயங்களில், கர்ம பலனும் கர்மா என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது ஒருவன் அனுபவிக்கும் பலன்கள், ப்ராரப்தம், ஆகாமியம் ஆகியவற்றின் விளைவே. இறப்பு வரும் காலத்தில், ப்ராரப்தம் முழுமையாகத் தீர்ந்துவிட்டாலும் ஆகாமியத்தின் ஒரு பகுதிதான் இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

*6. மனிதப்பிறவிகளின் கர்மாக்களைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறீர்கள், மிருகங்களின் கர்மாக்களைப் பற்றி...*

மிருகங்களுக்கு ஆகாமியக் கர்மாக்கள் இல்லை. மிருகமாகப் பிறவியெடுத்த ஜீவாத்மா தான் மிருகமாகப் பிறப்பதற்குக் காரணமான பாபகர்மாவை மட்டும் தான் தீர்த்துக் கொள்கிறது. அதாவது, அது, தன் ப்ராரப்த கர்மாவை மட்டும்தான் அனுபவிக்கிறது. ஒரு புலி, ஒரு பசுவையோ அல்லது கங்கையில் இருக்கும் ஒரு மீனையோ கொல்வதால், எந்த பாபத்தையும் சம்பாதிக்காது. கங்கையில் எப்பொழுதும் வசிப்பதால், புண்ணியத்தையும் சம்பாதிக்காது. இந்தக் கர்மாவைத் தீர்த்துக் கொண்டபின், அவை மனிதர்களாக மறுபிறவி எடுக்கின்றன.

தொடரும்......

**ஜாதக பரிவர்த்தனைக்கு அனுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| | |
|---|---|
| **திருமதி. தனலட்சுமி** | **திருமதி. ராஜலட்சுமி** |
| **9444140119** | **7092199447** |

# ஸந்த்யா வந்தன பயிலரங்கம்

சென்றமாத தொடர்ச்சி....

25ம் தேதி மே மாதம் காலை 5.00 மணி முதல் பயிலரங்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. ஸ்ரீ சந்திரசேகர்ஜி பூபாள ராகம் வாசித்து குழந்தைகளை துயிலெழ செய்தார்.காலை கடன்கள், குளியல் முடித்து, ப்ராதஸந்த்யா எல்லா ஸாகைகளுக்கும் தனித்தனியாக ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சி வழங்கப்பட்டது. கூடுவாஞ்சேரி ஸ்ரீ ராமன் ஏற்பாட்டில் பிரம்மச்சாரி குழந்தைகளுக்கு ஸமிதாதான பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. பெரியவர்களுக்கு எளிய யோகா பயிற்சியும் உடல் ஆரோக்ய வகுப்புகள் ஸ்ரீ சந்திரசேகர் ஜி மூலம் எடுக்கப்பட்டது. காலை உணவிற்குப்பின் ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி வகுப்பில் தேசமும், தெய்வமும் என்ற தலைப்பில் தேச பக்தி குறித்த வகுப்பு நடத்தினார்கள். மணியாச்சி ஸ்ரீ வாஞ்சிநாதன் வாழ்க்கையும் தியாகமும் குறித்த உணர்ச்சி மயமான தொடர் வகுப்பு மதியமும் தொடர்ந்தது. இரவும் நடத்தி பயிலரங்கத்திற்கு கலந்து கொண்டவர்களை மெய் மறக்கச் செய்தார். நம் நாட்டில் சுதந்திர வேள்வியில் தன்னை அர்ப்பணித்த மாவீரர்களை சொல்லி தேச பக்தியினை உணரச் செய்தார்கள்.

எல்லா குழந்தைகளுக்கும் மந்திர படனம், அபிவாதயே, அர்க்ய மந்திரங்கள் மனனம் செய்து வைக்கப்பட்டு, தனித்தனியாக சொல்ல வைத்து பிழை சரி செய்யப்பட்டது. குழந்தைகள் மிக உற்சாகமாக பயின்றதும், மிகவும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டதும் மிக்க மன மகிழ்வு தந்தது. முகாமிற்கு ஸ்ரீ விட்டல் ருக்மணி ஸமஸ்தான் நிறுவனர் ஸ்ரீஸ்ரீ விட்டலதாசன் JKDஅண்ணா அவர்கள் வருகை புரிந்து குழந்தைகளுக்கு அருளாசி வழங்கி வேதபாரதியை மனதார பாராட்டி சென்றார்கள். வேதபாரதி அன்பர்களுக்கு மிக ஊக்கமாக இருந்தது. மதியம் மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தனது உரையின் மூலம் வேத நெறி வாழ்க்கை முறை பற்றிய விளக்கம் கொடுத்தார்கள். உடற்பயிற்சிக்குப் பின் கோவிந்தபுரத்தில் உள்ள ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனம் சென்று சாயம் ஸந்த்யா அனுஷ்டானம் செய்து வைக்கப்பட்டது. மஹா ஸ்வாமிகள் தபோவனத்தில் எல்லா குழந்தைகளுக்கும் பால், பழம் கொடுத்ததில் நிர்வாகத்தினர் மிக்க நெகிழ்ந்தனர்.



26 ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை முதல் நித்ய கர்மாக்கள் முறையாக நடைபெற்றது. யோகாஸன பயிற்சி ஸமிதாதானம், பரிசேஸனம், பயிற்சிகள் நடைபெற்றது.

ஞாயிறு அன்று மதியம் உணவிற்குப்பின் குழந்தைகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஸ்ரீ சந்திரசேகர்ஜி நடத்தினார்கள். முகாம் பற்றிய கருத்துக் கேட்பு பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் நடைபெற்றது. காலை 10.00 மணிக்கு கடலூர் டாக்டர் வாஸுதேவன் வகுப்பில் ஸந்தியா வந்தன மஹிமை, மந்திர சக்தி குறித்த வகுப்புகளும் கேள்வி பதில் நிகழ்ச்சியும் நடந்தது.

ஆசிரிய பெருமக்களுக்கு ஸம்பாவனை நிகழ்ச்சியும், முகாம் பற்றிய தொகுப்பும் ஆசியுரையும் ஸ்ரீ விட்டல் மஹராஜ் குழு ஸ்ரீமான் பஞ்சாபி கேச அய்யர் தலைமையில் நடைபெற்றது.

அடுத்த ஆண்டு 10 நாட்களுக்கு குறையாமல் முகாம் நடத்திட வேண்டும் என்று கருத்து முன் வைக்கப்பட்டது. முகாம் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு செய்த எல்லா நல் உள்ளங்களையும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ இறைவனை ப்ராத்தனை செய்கிறோம்.

“தனக்கென வாழோம் பிறர்க்கென வாழ்வோம்” இதுவே நற்பிறப்பு.

என்றும் அன்புடன்:
வேதபாரதி

செங்கல்பட்டு அருகிலுள்ள சிவாலயத்திற்கு
பூஜை செய்ய பூஜை முறை தெரிந்த அந்தணர் தேவை.
**மாத சம்பளம் ரூ.12,000/-**
வீடு மற்றும் உணவுக்குத் தேவையான ஏற்பாடு செய்யப்படும்.
தொடர்புக்கு :
**9443495950 / 9790920672**

## விஷ்ணு சஹஸ்ரநாமமும் சடையாண்டியும்

ஆட்டோ அனுபவங்கள் என்று ஒரு தொடரே எழுதலாம் என்கிற அளவுக்கு மிக நல்ல ஆட்டோக்காரர்களை நான் சந்தித்துள்ளேன். ஒவ்வொருவரும் ஒரு பல்கலைக் கழகங்களாக இருந்தனர் என்றால் மிகையில்லை. அவர்களிடமிருந்து ஏதோ ஒரு வாழ்க்கைப்பாடத்தை நான் கற்றுக் கொண்டேன். அன்று, எனக்கு வந்த ஆட்டோகாரார் பெயர் சடையாண்டி அவருடன் ஆன உரையாடல் உங்களுக்காக. (என் செல்போனில் பதிவு செய்துள்ளேன்)

ஆட்டோவில் விஷ்ணு சஹஸ்ரநாமம் ஒலித்துக் கொண்டிருந்தது. நான் ஏறியதும் நிறுத்திவிட்டார். -- கேட்பதற்காக வண்டி நகர்ந்ததும், அதை போடுப்பா என்றேன். ஆனால் அவர் பேசினார். பேச்சு ஆன்மீக விஷயமாக இருக்கவே, நான் சட்டென்று என் செல்போனில் பதிவு செய்தேன்.

இந்தப் பாட்டை கேட்டு பகவான் நரசிம்மரை நினைச்சு நினைச்சு கண்ணீர் விட்டு, ஆட்டோல உக்காந்து கதறிக்கதறி அழுதேன். எவனாவது மனுஷன்கிட்ட என் வேதனைய சொன்னா, உடனே இவனுக்கு ஏதோ பணத்தொல்லை போலிருக்கு, அதான் நம்மகிட்ட வந்து புலம்பறான்னு கேலி பேசுவான். இதையே ஆண்டவன் கிட்ட சொன்னா, அவனுக்குத் தெரியும் எது நியாயம், தர்மம், எது நல்லது, எது கெட்டதுன்னு. எல்லாத்தையும் தீத்துவைப்பான் என்ன நான் சொல்றது? சரிதானே அம்மா? என்றான்.

“நீங்க எந்த பாட்டை சொல்றீங்க?”

‘‘விஷ்ணு சஹஸ்ரநாமம்’’ அம்மா. எம்.எஸ். அம்மா பாடறாங்களே. ராஜாஜி கூட முதல்ல வந்து பேசுவாரே. அதைக் கேட்டதுலேர்ந்து அம்மா, நான் ஒரு நிலைல இல்ல. அந்த கேசட்டை வாங்கியாந்து போட்டு போட்டு கேப்பேங்கம்மா. எம்.எஸ். சுப்புலஷ்மி அம்மாவை பத்தி நிறைய பிராமின்ஸ் கிட்ட விசாரிச்சேன். விஷ்ணு சஹஸ்ரநாமம் அந்தம்மா



பாடினதைதான் எல்லோரும் கேக்றாங்க. விஷ்ணுவே கூட அதைத்தான் கேக்றாருன்னு ஒரு அம்மா சொன்னாங்க. நானும், வண்டிய எடுத்தா, அடுத்த நிமிஷமே போட்டு, கேட்டு கேட்டு எனக்கு மனப்பாடமே ஆகிபோச்சு. அந்த அம்மாவோட குரல், சமஸ்க்ருதத்தை அவங்க உச்சரிக்கிற விதம், எல்லாம் மனசை ஏதோ பண்ணிடிச்சு. என் ஆட்டோல எப்பவும் சத்தமா அந்தம்மா குரல்தான் கேட்டுகிட்டிருக்கும். ஆனா அதோட பொருள் தெரியலை. அதைபத்தி எனக்கு கவலையுமில்லை. எப்ப கேட்டாலும் என்னை “வா,வா” ன்னு யாரோ கூப்பிடற மாதிரி இருக்கும். ரொம்ப ஈடுபாடாயிட்டேன் என்று தன்னை மறந்து பேசிக்கொண்டே வந்தவர். ராம ராம ராமேதி... என்று முழுவதும் சொல்லிவிட்டு, இந்த மந்திரம் மட்டும் இல்லைன்னா விஷ்ணு சஹஸ்ரநாமமே இல்லைங்கிற முடிவுக்கு நான் வந்துட்டேன். அந்த நாலு வரிக்கு அப்படி ஒரு ஈர்ப்பு இருக்கு. என்னை தூக்கத்துல எழுப்பி உக்காரவச்சு கேட்டாக்கூட நான் இதை சொல்லுவேன். வாழ்க்கைல எனக்கு ஒரே சமாசாரம் இதுதான்.

என்னை, யார் யாரோ என்னன்னமோ பண்ணி, என்னை கோர்ட்டுக்கு இழுத்தாங்க, ரோடுல இழுத்துப் போட்டாங்க, ஆட்டோவை புடுங்கிகிட்டாங்க, ஆனா ஒண்ணும் நடக்கலை. (இதைவிட என்ன நடக்கணும்) நான் எழுந்து எழுந்து வந்துட்டேன். எனக்கு மூணு பசங்க. எங்கிட்ட ஒண்ணும் கிடையாது. எல்லாத்தையும் ஏமாத்திட்டாங்க. அப்பா, என் மூணு பசங்களுக்கும் நீதான் பொறுப்பு என்ன செய்வியோ, ஏது செய்வியோ எனக்குத் தெரியாதுன்னு 1997-ல சோளிங்கர் நரசிம்மன் கிட்ட போய் ஒப்பாரி வச்சேன். “அப்பா எங்கிட்ட ஒண்ணுமேயில்லை. எல்லாத்தையும் ஏமாத்திட்டாங்க, இந்த மூணு பசங்களையும் நீயே படிக்கவை. இதுகளுக்கு நீதான் அப்பா, அம்மா எல்லாம்” ன்னு போய் வேண்டிகிட்டேன். அதே மாதிரிதான் எல்லாம் நடந்திச்சு.

மூணுபேரும் பாஸ்டன் ஸ்கூல்லதான் படிச்சாங்க. மூணு பேருக்கும் அந்த விஷ்ணுவே அவதாரமா வந்து உதவி

பண்ணுனாங்க. இப்ப மூத்தவன் மும்பாய்ல TCSல இருக்கான். சின்னவன் விப்ரோல இருக்கான். மூணாவத பொண்ணு விப்ரோ கம்பெனில வேலைபாக்குது.கல்யாணம் ஆயிடிச்சு எல்லாம் சோளிங்கர் நரசிம்மர் செஞ்சதுதான். இன்னிவரைக்கும் எல்லாத்தையும் நடத்தி குடுத்துகிட்டு இருக்காரு. ஏதாவது ஒண்ணுனா, சோளிங்கருக்கு போய் நரசிம்மர்கிட்ட சொல்லிட்டு வந்துடுவேன். நடத்திக் கொடுத்திடுவாரு. பெரிய பையனுக்கு லோன் கொடுத்தவரு பேரு நரசிம்மன். பாரீஸ்ல வேலையா இருக்காரு. பொண்ணுக்கு லோன் கொடுத்தவர் ஸ்பென்சர்ல திருவேங்கடம்ங்கிறவரு கொடுத்தாரு. மூணாவது பையனுக்கு லோன் கொடுத்தவர் அடையாறுல பெயர் ஸ்ரீனிவாசன் எல்லோரும் விஷ்ணுவோட அம்சம்தான்.

எனக்கு நடந்தவை அனைத்தும் அற்புதம் அம்மா. எனக்குக் கிடைச்சத எல்லாமே வரப்பிரசாதம் என்று கூறிவிட்டு தன்னுடைய வீடு பற்றி ஏதோ சொன்னார். அதற்குள் நான் இறங்கும் இடம் வந்துவிட்டது. மனதார பாராட்டிவிட்டு நிறைவோடு நான் வந்த காரியத்தில் கவனத்தை செலுத்தினேன்.

இப்போது விஷ்ணு சஹஸ்ரநாமம் கேட்கும் போதெல்லாம் ஆட்டோகார சடையாண்டி நினைவில் வந்து போகிறார். இத்தனை ஆழமான பக்தி எனக்கு இல்லையே என்கிற வருத்தம் கூட வருகிறது. இசை ஆசிரியையான என் அம்மா “பாகேஸ்வரி” ராகத்தில் சொல்லிக்கொடுத்த “ஏழைகள் கண்ணீரிலே உள்ளான், எங்கள் இறைவன்” என்கிற பாடல் வரிகளின் சத்தியத்தை நான் சடையாண்டியிடம் உணர்ந்தேன்.

**- டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**

வசதி குறைவான அந்தண குடும்பங்களுக்கு அந்திம காரியங்கள் முதல் 2 நாட்களுக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் வைதீக காரியங்கள் செய்து கொடுக்க முன்வந்துள்ள **ஸ்ரீ கௌதம் கனபாடிகளை** வேதபாரதி வணங்குகிறது.

தொலைபேசி எண் : *9841711320*




# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**மணிமங்கலம், தாம்பரம், சென்னை**

**CODE 1405**

**பாடப்பிரிவுகள்:**

**இளநிலை (பி.இ.)**

**MECHANICAL, CIVIL, CSE, ECE, EEE**

**கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**

**வளாக கட்டமைப்பு: கல்லூரி வளாகம் பசுமைச் சூழலில் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி வளாக கட்டமைப்பை தன்னுள்ளே கொண்டுள்ளது.**

**சிவனடியார்கள் குடும்பக் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.**



டாக்டர். **வி.பி.இராமமூர்த்தி.** பிஎச்.டி.
நிறுவனம் மற்றும் கல்லூரி தலைவர்
மேனாள் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**டாக்டர். வி.பி.ஆர். நகர், மணிமங்கலம், தாம்பரம், சென்னை – 601 301, தமிழ்நாடு**

**Ph : 9 283 283 283 / 72 9999 6789 / 98416 55959**
**044 - 71 700 801 / 803 / 2436 3321.**
**www.dce.edu.in**

"அகத்தின் அழகு முகத்தில்
முகத்தின் அழகோ பற்களில்"




ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி

என்று நம் முன்னோர்கள் சும்மா சொல்லவில்லை
ஆலங்குச்சியிலும், வேலங்குச்சியிலும் கசப்பும், துவர்ப்பும் அதிக அளவில்
இருக்கின்றன, இவற்றை கொண்டு பல் துலக்கும்போது மஞ்சள் கறை நீங்கிவிடுகிறது.
ஈறுகள் பலமடைகிறது தேவையற்ற பாக்டீரியாக்கள் அழிக்கப்படுகின்றன இதனால்
வாய் நாற்றம் குறைகிறது.

தற்போது நமக்கு இவை கிடைப்பது அறிதாகி வருவதால்
பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட ஹேப்பி பற்பொடியில்
பல் தேய்க்க பற்களை கெடுத்துவரும் புழுக்கள் சாகும், பற்சொத்தை நீங்கும்
பல்வலி, பல்லசைவு, பல்லீறுகளில் உண்டான ரணம், இரத்த கசிவு, பற்கூச்சம்
முதலியவை சிறந்த நிவாரணி

மற்றும் நல்லெண்ணெய் சிறிது கலந்து விரல்களால் ஒவ்வொரு பல்லையும்
தனித் தனியே மேலும் கீழுமாக தேய்த்து பின் குளிர்ந்த நீரால் வாய் கொப்பளிக்க
பற்கள் பளிச்சென்று மின்னும்.

DR.PASSUMAI ORGANIC & NATURALS
5B/4, Dhandeeswaram, 7th Cross, Velachery, Chennai - 600 042.
CONTACT: 044-42325018





G. SIVAGAMASUNDARI
99940 89133




N. GURUMURTHY
99940 89140

SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.


# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **06.07.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**07.07.2019, ஞாயிற்றுக்கிழமை**

திருஇடைச்சுரம் (திருவடிசூலம்) கிராமத்தில் அமைந்துள்ள **அருள்மிகு இமயமடக்கொடி உடனுறை திருஇடைச்சுரநாதர் திருக்கோயில்**